ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீராமர் தோத்திரமாலை.

சென்னை - ஜூலை

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீராமர் தோத்திரமாலை.

பூதலத்தையோரடி யளந்தரூபமானபொற்
பாததாமரைச்சரண் பணிந்துபூசைசெய்குவேன்
மாதவகோவிந்த அரிகேசவஅரிநாரண
நாதகீதவேதமந்திர ராமராமராமனே. க

சூகரத்தின்வடிவெடுத்த சுந்தராசவுந்தரா
ஏகலோகநாயகாநீ யெங்குமாகிநிறைந்தவா
மேகமாயளாவிநின்ற வதஞானதேசிகா
நாகமீதில்மேவுகின்ற ராமராமராமனே. உ

காரணதாமோதரா கரியநீலவர்னனே
பூரணபயோதரா புராதனநிராதன
வாரணதிமூலமென்ற போதுவந்தவாமன
நாராயணயசோதைபுத்ர ராமராமராமனே. ௩

வீரசிம்மஉக்ரமுற்ற விஜயமீறுதசரதன்
பாரில்மைந்தனுகவந்த பஞ்சவர்சகாயனே
பூரணகிருபாகரா புதியதூணில்வந்துமுன்
நாரசிம்மரூபமான ராமராமராமனே. ௪

மாமனானகஞ்சனை வளைந்துகொண்டுவென்றவா
பூமியுண்டுமிழ்ந்தவா புகழ்ந்துபொன்னரங்கமே
வாமனானசொரூபனான வாசுதேவதேவனே
நாமமாயிரம்படைத்த ராமராமராமனே. ௫

கோடிசூரியப்பிரகாச கொண்டல்மேகவண்ணனே
வாடிநொந்திடைந்திடாமல் வந்தருள்புரிந்தருள்
மேடியந்தகன்வெகுண்டு சீறிமோதியுன்னிடம்
நாடிவந்தபோதுகாரும் ராமராமராமனே. ௬

பாவியென்றுபேர்கொடாதே பஞ்சபாதகங்களை
மேவிநூறுகுற்றமேசெய்தாலும் வந்தென்மெய்யினில்
காவலாகநீயிருந்து கருணைகொண்டுகாரையா
நாவினால்நிதந்துதிப்பேன் ராமராமராமனே. ௭

தந்திதான்மூன்னேலமென்ற போதுவந்ததீதமாம்
வந்துகாத்ததன்றுபோல் வந்துகார்ப்பதெந்தனுள்
செந்திருமணாளனான ஸ்ரீனிவாசநாதனே
நந்தியசகரன்றரித்த ராமராமராமனே. ௮

மச்சரூபராகவா வராகரூபராகவா
கொச்சைஆயருக்குகந்த குன்றெடுத்தநின்றவா

பச்சைஆலினிலதுயின்ற பச்சைநீலவர்னனே
ரட்சகாஸ்ரீராகவா ராமராமராமனே. ௯

தானஞ்செய்துமறிகிலேன் தவங்கள்செய்துமறிகிலே
ஆனவனபரானபேர்க் கன்னமிட்டுவறிகிலேன் [ன்
தேனமர்ந்தமலர்கொண்டுன்னைச் சிந்தைசெயதுமறிகி
லேன், நானறிந்தொன்றுமில்லை ராமராமராமனே.

கந்தன்மாதுலாவுயர்ந்த கருடகேதவாகனு
சேர்ந்தடுமையிவனுமென்று சூட்சபாதநல்கியே
யிந்தவேளைவர்துரட்சி யேகலோகநாயகா
நந்தகேசவாமுகுந்த ராமராமராமனே. ௧௧

இல்லறத்தின்மாய்கையாலே யேங்கினேன்மயங்கியே
புல்லறிவுகொண்டியானும் போற்றியான் பணிந்திலே
ன், அல்லலற்றகாயபென் றறிந்துவந்துயென்னுள்ளே
நல்லறிவுதந்துரட்சி ராமராமராமனே. ௧௨

சங்குசக்ரரூபமான சரூபசீவவாசகா
எங்குமாய்நிறைந்தவா யிலங்குமின்னூல்மார்பனே
மங்குல்மேனியாயுயர்ந்த மகரகுண்டலாதிபா
ரெங்குநாயகாமுகுந்த ராமராமராமனே. ௧௩

அம்புவேல்விழிமின்னார்கள் ஆசைதன்வலைக்குளே
இம்பசாகரத்தழுத்தி யெண்ணமற்றவஞ்சகன்
வம்புகோடிசெய்திடினும் மாயனேபொருத்திடீர்
நம்பினேனுனுன்னடிமை ராமராமராமனே. கச

ஆழமீதினில்துயின்ற அச்சுதாமுன்னாதியில்
ஏழுமாமரத்தையன்று மெய்துராவணாதிகள்
மாளவேசரக்கொடுத்த மாயனேமகிழ்ந்துயென்
னாளும்நீயுகந்துகாரும் ராமராமராமனே. கரு

குற்றமென்பதுசெய்தாலுங் குலைகள்செய்திருக்கி னும், பெற்றதாய் விகாதமுண்டோ பிள்ளை என்று கொஞ்சுங்கள், அற்றதன்மைபாவனோ னரியவேகு றைசெய்தாலுமென், நற்றமிழ்க்குகந்துகாரும் ராம ராமராமனே. கசு

களபவாசனைமிகுந்த கரியமேகவர்னனே
துளபமாலையைபுனைந்த சுருதிவேதநாயகா [தான்
உளமகிழ்ந்து கருணைகொண்டு உன்னடிமையென்று
நளினதாமரைப்பாத ராமராமராமனே. கஎ

சிகரகோபுரஞ்சிறந்த செய்யவீதிசூழவே
மகரதோரணஞ்சிரம்ப வரிசைமண்டபங்களும்

பகறமுற்றகொடிகளும் பணிந்துதானயோத்திதன்
நகரவாசமாயிருந்த ராமராமராமனே. கஅ

வாசமாலிகைபுனைந்து மண்ணையுண்டவண்ணனே
கேசவாமூராரிதந்த கிருஷ்ணனேமனோகரா
தாசனென்றுபாததா மரைச்சரண்கொடுத்தருள்
ராசவெங்கடேசனான ராமராமராமனே. கசு

கோவினிற்றுயின்றவா குவிந்திலேறிநின்றவா
காலிகன்றுமேய்த்தவாமுன் கஞ்சனைவதைத்தவா
சாலநான்முகனையுந் தன்னிலேபடைத்துமே
நாலுவேதமும்புகழ்ந்த ராமராமராமனே. உ0

தஞ்சமானதேதுன்பால தாமரைச்சரணனே
மிஞ்சவேறுதப்புமில்லை மேகநீலவர்ணனே
அஞ்சலஞ்சதென்றுகை யமர்த்தியாதரிப்பையோ
ரஞ்சிதப்புரகாசனான ராமராமராமனே. உக

எண்ணுமம்பரானபே ரிடத்திருந்துவாவியே
புண்ணியநாமதேசிகா புவனரக்ஷகர்த்தனே
வண்ணனேலீலாவினோத வாசனேநின்மலரடி
நண்ணினேன்வைகுந்தமேவும் ராமராமராமனே. உஉ

விழிந்துசெய்யவேணுமென்ற விதுரன்மனையிலேகி
யே, இருந்துமாய்கையாகவில் லிரண்டுதுண்டமாக்கி
னாய், பொருந்துமாயமோமயக்க புண்யரீகமாயனே,
நருந்துளவமணிந்தரங்க ராமராமராமனே. ௨௩

மாயவாமுன்பாரதப்போர்வந்துதோன்றும்நாளையில்
நேயமாயருச்சுனர்க்கு நின்றுதேர்ந்தூர்ந்தவா
ஆயனே அனந்தமான ஆதிலட்சுமியெனும்
நாயகிமணாளனான ராமராமராமனே. ௨௪

சாடிசெய்துரியோதனன் சபையிலேதிரௌபதை
ஆடையென்றுரிந்தபோது அதிமூலமென்றிட
வாடிநொந்திடைந்தசூது மணியெடுத்துருட்டையில்
நாடியொன்றுலட்சமென்ற ராமராமராமனே. ௨௫

கச்சிலையெனச்சபித் தகலிகைசாபத்தையும்
உச்சிதமாகயன் றுகந்துசாபநீக்கினாய்
அச்சானகிதன்னைமேவ ஆசைகொண்டுமிதிலையில்
நச்சிலைவனைத்துநின்ற ராமராமராமனே. ௨௬

ஆவல்கொண்டுபாரிலே அலைந்துமேயலாதுநின்
சேவடிக்காளாய்வராத சென்மமென்னசென்மமோ
பாவகாரியென்றெண்ணாமல் பாதுகாத்தருள்புரி
நாவலர்க்குபாய்சுமந்த ராமராமராமனே. ௨௭

ஏகவஸ்துவாகிநின்ற வெங்கரங்கநாயகா
சாகரத்தினுற்றுயின்ற சாஸ்திரநாமதேசிகா
ராமகர்ணுசவுந்தரா முராரிமோட்சகாரணு
காகவர்யனந்தகோக ராமராமராமனே. உஅ

சானகிமணுளனே தரணியையோரடியுமாய்
வானமோடளாநின்ற வராகாவதாரனே
நமோநமோநாராயணு முகுந்தனந்தகேசவா
ஞானதேசிகப்பிரதாப ராமராமராமனே. உக

வே று.

செப்பியேஉந்திபூத்தோன் செங்கண்மால் பாதம் போற்றி, முப்பதும்படிததோர் கேட்டோர் முற்றி லும் எழுதினோர்க்கு, தப்பிலாவரங்கள்தந்து சந்ததி கிளைபெற்றோங்க, இப்புவிதனிலேவாழ்ந்து எண்ண மற்றிருப்பர்தாமே.

முற்றிற்று.